**சுருக்கம்**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்** – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண். 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்குதல் – முதற்கட்டமாக செயல்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண்.43 நாள். 27.07.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053

சுபகிருது ஆடி 11

படிக்கப்பட்டவை:–

1 சென்னை மாநகராட்சியின் 16-09-1920 நாளிட்ட தீர்மானம்.

2 அரசாணை எண்.1008, Local Self – Government Department, நாள். 07–06–1922.

3 அரசாணை எண்.1850, கல்வித் துறை, நாள் 8.11.1957.

4 அரசாணை (நிலை) எண்.857, பொதுத் (TPEP) துறை, நாள். 28.05.1982.

5 அரசாணை (நிலை) எண்.499, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள். 26.05.1989.

6 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசாணை (நிலை) எண்கள். 73, 95, 47, 50, 51, 60, 69, 85 மற்றும் 176 நாள். 27–04–1998, 16–06–2004, 13–05–2006, 19–05–2006, 24–04–2007, 24–05–2006, 11–05–2007, 14–07–2008 மற்றும் 17–09–2010.

மேலும் படிக்கப்பட்டவை:

7 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், வெளியிட்ட அறிவிப்பு நாள். 07–05–2022.

8 சமூக நல இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண். 17570/ 2021/மஉதி–2/ நாள். 07.07.2022

––––––

த.பி.பா.

<u>ஆணை:-</u>

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே"
(புறநானூறு 173)

சங்க காலத்தைச் சேர்ந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால் பசிப்பிணியைப் போக்கிய மருத்துவராகப் போற்றப்படுகிறார். அம்மரபின் தொடர்ச்சியாகவே, தமிழ்ச் சமூகத்தை வழிநடத்திய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையை அகற்றிடவும், மாணவர்களின் கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளனர்.

2. தொன்றுதொட்டு நிலவும் சமூகச் சிக்கலுடன் வறுமையும் இணைவதால் ஏழை, எளிய சமூகக் குழந்தைகளின் காலடிகள் கல்விச்சாலையை எட்ட முடியவில்லை என்பதைக் கருத்திற் கொண்டு, ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பள்ளியில் உணவளிக்கும் திட்டத்தை முன்மொழிந்து நிறைவேற்றியது அப்போதைய சென்னை மாநகராட்சி நிர்வாகம்.

3. சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர். பிட்டி தியாகராயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், இந்தியாவிலேயே முதன்முதலாக 16.09.1920 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மதிய உணவுத் திட்டம், சென்னை, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

4. ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ஒர் அணாவிற்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளப்படும் வகையில், ஆயிரம் விளக்கு பகுதியில் அமைந்த பள்ளியில் தொடங்கப்பட்ட இத்திட்டம், பின்னர் சேத்துப்பட்டு, மீர்சாகிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இயங்கிய மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவாக்கப்பட்டது. இதன் பயனாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஐந்து பள்ளிகளின் ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை 1922-23-ஆம் ஆண்டு 811 -லிருந்து 1925-26ஆம் ஆண்டில் 1,671 ஆக உயர்ந்தது.

5.அதன் பின்னர், 1957ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்களால் தொடக்கக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ரூ.18/-க்கு மிகாமல், இத்திட்டத்தைச் செயல்படுத்திட பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

6. அதன் பின்னர், முன்னாள் முதலமைச்சர் திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள், ஜூலை 1982 முதல், 2 முதல் 5 வயது வரையுள்ள முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயது வரையுள்ள தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியருக்கும் சத்துணவு வழங்கப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பாப்பாகுறிச்சியில் 01.07.1982 அன்று முதல் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

7. சத்துணவுத் திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட, 1989–ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், சத்துணவுடன் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப்படுத்தினார். 23.7.1998 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்ட முட்டை இனி வாரந்தோறும் ஒரு முறை வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

8. மேலும், முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களால் 2006–ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15–ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாளாகக்" கொண்டாடிட ஆணையிடப்பட்டு, அந்நாளில், சத்துணவுடன் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டை வழங்கும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கான செலவினமாக ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், கல்வி வளர்ச்சி நாளான 15.07.2007–இல், 165 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டமும், 15.07.2008 முதல் சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வாழைப்பழங்கள் வழங்கும் திட்டமும், பின்னர், ரூ.125.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சத்துணவுடன் வாரம் 5 முறை முட்டைகள் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவு திட்டம் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

9. வாஷிங்டன் பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் பொருளாதார வல்லுநர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் அறிக்கையில், 2006–2016 காலக்கட்டத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் (Z–scores) 13 முதல் 32 சதவிகிதம் வரை உயர்ந்திருப்பதற்கு, சத்துணவுத் திட்டம் ஒரு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மூன்றில் ஒரு குழந்தை வளர்ச்சி குறைவாகவோ அல்லது அவர்களின் வயதுக்கேற்ற உயரத்தை அடையாமலோ இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் தொடர்ச்சியான ஊட்டச் சத்துக் குறைபாடே ஆகும். அதே போன்று தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் பயிலும் சில குழந்தைகள் தற்போதும் வயதுக்கேற்ற உயரத்தினை அடையாமல், அவர்களின் வளர்ச்சி தடைபடுவது தெரியவருகிறது. மேலும்

ஊட்டச்சத்து குறைபாட்டினால் அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த இயலாமல் போய்விடும் வாய்ப்பும் இருக்கிறது.

10. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 7.5.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

*"அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இனிமேல் காலைச் சிற்றுண்டி வழங்கப்படும். நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும், பள்ளிக்குச் செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். இதனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வழங்குவோம், படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்".*

11. மேற்காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு சமூக நல இயக்குநர் அவர்கள், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ மாணவியருக்கு சூடான சமைத்த, சத்தான மற்றும் சுவையான காலை உணவினை வழங்குவதற்கான கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

12. சமூக நல இயக்குநர் அவர்கள், இத்திட்டம் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களினால் முறையே பெருநகர சென்னை மாநகராட்சி, ஏனைய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக செயல்படுத்துவதற்குரிய பொறுப்புகள் அனைத்தும் இத்திட்டத்தினை செயல்படுத்தும்

முகமைத் துறைகளான மேற்கண்ட துறைகளைச் சார்ந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

13. மேலும், சமூக நல இயக்குநர் அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கு முதற்கட்டமாகக் காலை உணவு வழங்கும் திட்டத்தை ரூ.33.56 கோடி செலவினத்தில் செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

14. மேற்கண்ட சமூக நல இயக்குநர் அவர்களின், கருத்துருவினை அரசு விரிவாகப் பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணைகளை வெளியிடுகிறது:–

i. மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும், இவ்வாணையின் இணைப்பு–1இல் குறிப்பிடப்பட்டுள்ள 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை 2022–2023–ஆம் ஆண்டில் முதற்கட்டமாகச் செயல்படுத்திட, ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்து ஆறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

ii. திட்டத்தின் நோக்கம், சிற்றுண்டியின் வகைகள், பொதுவான நடைமுறைகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையின் இணைப்பு–2–இல் வெளியிடப்படுகிறது.

iii. இவ்வாணையின் இணைப்பு–2–இல் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றுண்டி வகைகளிலிருந்து ஏதாவது ஒரு சிற்றுண்டியினை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது இரண்டு நாட்களிலாவது, இயன்ற அளவு, அந்தந்தப் பகுதிகளில் விளையும்/கிடைக்கும் சிறுதானியங்களின் அடிப்படையிலான சிற்றுண்டியினைத் தயார் செய்து வழங்கப்படவேண்டும்.

iv. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் இவ்வாணையின் இணைப்பு–1ல் குறிப்பிடப்பட்டுள்ள, முறையே, பெருநகர சென்னை மாநகராட்சி, ஏனைய மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும்

தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை இவ்வாணையின் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது. அரசு அனுமதித்துள்ள ஒரு வேளை காலை உணவுச் செலவான ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சம் மட்டும்) அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். திட்டச் செயல்பாட்டின் போது கூடுதல் செலவினம் ஏற்படின் அது குறித்து தனியே முடிவு செய்யப்படும், மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 1,545 பள்ளிகளின் விவரங்களை மேற்கண்ட துறைகளுக்குத் தெரிவிக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

v. காலை உணவு வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சம் மட்டும் ) தொகையினில் ரூ.31.91 கோடி (ரூபாய் முப்பத்து ஒன்று கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம் மட்டும்) பெற்று, அதில் ரூ.1.66 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சம் மட்டும்) சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், ரூ.15.43 கோடி (ரூபாய் பதினைந்து கோடியே நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் மற்றும் ரூ.14.82 கோடி (ரூபாய் பதினான்கு கோடியே எண்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநருக்கும் பகிர்ந்து அளிப்பதற்கும், திட்டத்திற்கான நிர்வாக செலவினம் மற்றும் மதிப்பீட்டு ஆய்வுகளை உரிய தருணங்களில் மேற்கொண்டு ஆவணப்படுத்த ரூ.1.65 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

vi. நாட்டிலேயே முன்னோடியாக அறிமுகப்படுத்தப்படும் இத்திட்டம், **"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"** என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.

vii. மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்களை இவ்வாணையின் இணைப்பு-2இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் அலுவலர்களைக் கொண்டு அமைப்பதற்குச் சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

viii. திட்டச் செயல்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில், இனிவரும் ஆண்டுகளில் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

15. மேலே பத்தி 14(i)–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் புதிய கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

2236–சத்துணவு 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102–மதிய உணவு– மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல்.

| | |
|---|---|
| 309–உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை<br>(IFHRMS ததொகு : 2236 02 102 BG 30903) | ரூ. 31,91,00,000/– |
| 333 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 03–சிறப்புப்பணி<br>(IFHRMS ததொகு : 2236 02 102 BG 33303) | ரூ. 1,65,00,000/– |
| மொத்தம் | ரூ. 33,56,00,000/– |

16. மேலே பத்தி 14(i)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன் பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வசெபொ–I)த் துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்குத் தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள், 1963–இல் உள்ள அட்டவணை–A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வசெபொ–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022–23–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குத் தவறாது உரிய நேரத்தில், நிதித் (வ.செ.பொது–I)/(சந))த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

17. மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பிற்கு சமூகநல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

18. மேற்படி துவங்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பினை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுகொள்ளப்படுகிறார்.

19. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 37575 /நிதி (சந)/2022, நாள். 25.07.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0805 (எண்ணூற்று ஐந்து) (IFHRMS ASL No.2022070805).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ. இறையன்பு**
**தலைமைச் செயலாளர்**

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
சமூக நல இயக்குநர், சென்னை-15.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை-28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,சென்னை-34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I/II), சென்னை-18
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சந/வசெபொ–I,II, வ.வ–I) த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்

**//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//**

27/7/2022
அரசு சார்பு செயலாளர்

## இணைப்பு-1

**அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 27-07-2022**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

**காலை உணவு வழங்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள தொடக்கப் பள்ளிகள்/ பயனாளிகளின் விவரம் ( 1 முதல் 5ஆம் வகுப்பு வரை)**

### I. சென்னை மாநகராட்சி

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவ / மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 36 | 5,941 |

### II. மற்ற மாநகராட்சிகள்

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | 40 | 2928 |
| 2 | காஞ்சிபுரம் | 20 | 1892 |
| 3 | கடலூர் | 15 | 630 |
| 4 | தஞ்சாவூர் (ம) கும்பகோணம் | 21 | 1442 |
| 5 | வேலூர் | 48 | 3432 |
| 6 | திருவள்ளூர் | 6 | 1152 |
| 7 | தூத்துக்குடி | 8 | 817 |
| 8 | மதுரை | 26 | 4607 |
| 9 | சேலம் | 54 | 5719 |
| 10 | திண்டுக்கல் | 14 | 1223 |
| 11 | திருநெல்வேலி | 22 | 2658 |
| 12 | ஈரோடு | 26 | 2649 |
| 13 | கன்னியாகுமரி | 19 | 973 |
| 14 | கோயம்புத்தூர் | 62 | 7618 |
| | மொத்தம் | 381 | 37,740 |

**III. நகராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | நகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | விழுப்புரம் | 13 | 1382 |
| 2 | | திண்டிவனம் | 6 | 355 |
| 3 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 8 | 1388 |
| 4 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 3 | 118 |
| 5 | செங்கல்பட்டு | காட்டாங்கொளத்தூர் | 8 | 969 |
| 6 | | கூடுவாஞ்சேரி | 2 | 644 |
| 7 | நாமக்கல் | நாமக்கல் | 3 | 989 |
| 8 | | திருச்செங்கோடு | 7 | 484 |
| 9 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 17 | 1652 |
| 10 | | திருவத்திபுரம் (செய்யாறு) | 7 | 607 |
| 11 | அரியலூர் | ஜெயங்கொண்டம் | 9 | 464 |
| 12 | ராணிப்பேட்டை | ஆற்காடு | 6 | 1704 |
| 13 | திருப்பத்தூர் | ஆம்பூர் | 6 | 644 |
| 14 | | வாணியம்பாடி | 5 | 467 |
| 15 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | 11 | 431 |
| 16 | | சீர்காழி | 9 | 297 |
| 17 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 11 | 615 |
| 18 | இராமநாதபுரம் | பரமக்குடி | 7 | 956 |
| 19 | சிவகங்கை | காரைக்குடி | 7 | 839 |
| 20 | தூத்துக்குடி | கோவில் பட்டி | 2 | 306 |
| 21 | திருவாரூர் | மன்னார்குடி | 4 | 267 |
| 22 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 9 | 1119 |
| 23 | | மதுக்கரை | 3 | 730 |
| மொத்தம் | | | 163 | 17,427 |

**IV. வட்டாரங்கள்/ கிராம ஊராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | சூளகிரி | 133 | 10302 |
| 2 | தருமபுரி | பாலக்கோடு | 112 | 8404 |
| 3 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | 77 | 4163 |
| 4 | தூத்துக்குடி | விளாத்திகுளம் | 56 | 2350 |
| 5 | திருப்பூர் | குண்டடம் | 77 | 1746 |
| 6 | சிவகங்கை | எஸ். புதூர் | 47 | 2812 |
| 7 | தேனி | மயிலாடும்பாறை | 51 | 3978 |
| 8 | விருதுநகர் | காரியாபட்டி | 69 | 3884 |
| 9 | திருச்சிராப்பள்ளி | துறையூர் | 41 | 2705 |
| 10 | தென்காசி | மேலநீலிதநல்லூர் | 29 | 1331 |
| 11 | | குருவிகுளம் | 36 | 1151 |
| மொத்தம் | | | 728 | 42826 |

**V. மலைப்பகுதி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை | 15 | 984 |
| 2 | நாமக்கல் | கொல்லிமலை | 41 | 1710 |
| 3 | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை | 46 | 1981 |
| 4 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 34 | 1105 |
| 5 | ஈரோடு | தாளவாடி | 38 | 806 |
| 6 | நீலகிரி | கூடலூர் | 63 | 3575 |
| | மொத்தம் | | 237 | 10161 |

<u>தொகுப்பு</u>

| வ. எண் | விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மாநகராட்சி மையங்கள் | 417 | 43681 |
| 2 | நகராட்சி மையங்கள் | 163 | 17427 |
| 3 | வட்டாரங்கள் | 728 | 42826 |
| 4 | தொலைதூரம் / மலைப்பிரதேசம் | 237 | 10161 |
| | மொத்தம் | 1,545 | 1,14,095 |

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

27.7.2022
அரசு சார்பு செயலாளர்

## இணைப்பு-2

**அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 27-07-2022**

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

## வழிகாட்டு நெறிமுறைகள்

**தொடக்கப் பள்ளி மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்குதல்**

**( 1 முதல் 5ஆம் வகுப்பு வரை)**

**I . குறிக்கோள்கள் :**

- மாணவ/ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்
- மாணவ / மாணவியர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தலை உறுதி செய்தல்,
- மாணவ / மாணவியரின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், குறிப்பாக இரத்த சோகை குறைபாட்டினை நீக்குதல்
- பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் வருகையை அதிகரித்தல் / தக்க வைத்துக் கொள்ளுதல்
- வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல்

**II. காலை உணவு வகைகள் :**

பின்வரும் பல்வேறு விதமான சிற்றுண்டி வகைகளில் ஏதேனும் ஒன்றை குறிப்பிட்டுள்ள நாட்களில் வழங்க வேண்டும்.

| திங்கட்கிழமை-உப்புமா வகை | செவ்வாய்கிழமை-கிச்சடி வகை | புதன்கிழமை-பொங்கல் வகை |
|---|---|---|
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | ரவா காய்கறி கிச்சடி | ரவா பொங்கல்+ காய்கறி சாம்பார் |
| சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் | சேமியா காய்கறி கிச்சடி | வெண்பொங்கல் + காய்கறி சாம்பார் |
| அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் | சோள காய்கறி கிச்சடி | |
| கோதுமைரவா உப்புமா+ காய்கறி சாம்பார் | கோதுமை ரவாகாய்கறி கிச்சடி | |

| வியாழக்கிழமை -உப்புமா வகை | வெள்ளிக்கிழமை - கிச்சடியுடன் இனிப்பு |
|---|---|
| சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் | ஏதாவது ஒரு கிச்சடி வகையுடன் (செவ்வாய்கிழமை உணவு வகையின்படி) |
| அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் | ரவா கேசரி |
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | சேமியா கேசரி |
| கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | |

ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி / ரவை/கோதுமை ரவை / சேமியா / உள்ளூரில் / அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / மற்றும் சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக் கூடிய காய்கறிகள் (சமைத்த பின் 150 – 200 கிராம் உணவு மற்றும் 60 மி.கி காய்கறியுடன் கூடிய சாம்பார்) . ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவை வழங்கலாம்.

**III. பொதுவான வழிமுறைகள்:**

- காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் தரம் FSSAI நெறிமுறைகளுக்கு உகந்தவாறு இருக்க வேண்டும்.
- நகரப்புறப் பகுதிகளில், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மையப்படுத்தப்பட்ட சமையலறை அல்லது வேறு ஏதேனும் தகுதி வாய்ந்த அமைப்பின் மூலம் தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப்படுத்த வேண்டும், ஊரக பகுதிகளில் கிராம ஊராட்சி மற்றும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் மூலம் தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப்படுத்த வேண்டும்,
- காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப் பொருட்கள் (Extraneous substance) கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும்,
- உள்ளூரில் சமைக்க பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தபட வேண்டும், ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக் கூடாது,
- உணவு சமைக்க பயன்படுத்தப்படும் மசாலா பொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்,
- காய்கறிகளின் தரத்தை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்பட வேண்டும்,
- தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்த்தல் வேண்டும்.
- உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் அவ்வப்போது பள்ளிகளை ஆய்வு செய்து உணவின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும்,
- உணவு தயாரிக்கப்படும் இடத்தை தேர்வு செய்து, அந்த குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே உணவு தயாரிக்கப்பட வேண்டும்,
- உணவு தயாரித்தல் மற்றும் விநியோகிக்கும் பணிகளில் ஈடுபடும் சமையலர் மற்றும் உதவியாளர்கள் தன் சுத்தத்தை பராமரித்தல் வேண்டும்,

## IV. கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு

### கண்காணிப்புக் குழுக்கள்

காலை உணவு வழங்கும் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு கீழ்கண்ட துறை அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

- சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை
- ஊரக வளர்ச்சி,
- நகர்ப்புற நிர்வாகம்
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
- பள்ளிக் கல்வி
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்
- உணவுப் பாதுகாப்பு

## V. மதிப்பீடு

திட்டம் செம்மையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்ய ஏதுவாக அடிப்படை மற்றும் இறுதி நிலை ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையினால் தகுதி வாய்ந்த வெளி முகமை நிறுவனங்களின் வாயிலாக இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வெ. இறையன்பு**
**தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

27/7/2022

**அரசு சார்பு செயலாளர்**